## பாடம்: 5 - திருக்கேதாரம்

**வகுப்பு** : VIII

**பாடம்** : **தமிழ்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காட்டிலிருந்து வந்த .................... கரும்பைத் தின்றன.

   அ) முகில்கள்  ஆ) முழவுகள்  **இ) வேழங்கள்**  ஈ) வேய்கள்

2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................

   அ) கனகச்+சுனை  ஆ) கனக+சுனை  **இ) கனகம்+சுனை**  ஈ) கனம்+சுனை

3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .......................

   அ) முழவுதிர  ஆ) முழவுதிரை  **இ) முழவதிர**  ஈ) முழவு அதிர

### ஆ. குறுவினா

**1. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?**

புல்லாங்குழல் மற்றும் முழவு ஆகியவற்றைத் தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுகின்றார்.

### இ. சிறுவினா

**1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?**

- பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது, அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆன புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.
- கண்களுக்கு இனிய குளிர்ச்சிதரும் ஒளியை உடைய பொன் வண்ண நீர் நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த் திவலைகளை வாரி இறைக்கும்.
- நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மத யானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது தோன்றும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும்.
- இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் என்று சுந்தரர் வருணனை செய்கிறார்.

### ஈ. சிந்தனை வினா

**1. விழாக்களின்போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.**

- திருவிழாக் கூட்டத்தில் இரைச்சலைக் குறைக்கவும், திருவிழா நிகழ்வு நடக்கப் போகிறது என்பதை அறிவிக்கவும், இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை.
- அந்த உயிர்களைப் படைத்த இறைவன் இசையை விரும்புவான். அதனால் விழாக்களின்போது இசைக்கருவிகள் இசைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.
- இசைக்கருவிகளை இசைக்கும் போது உணர்ச்சிப் பெருக்கும், பக்திப்பெருக்கும் ஏற்படுவதாலும் விழாக்களின் போது இசைக் கருவிகளை இசைக்கும் வழக்கம் தோன்றியிருக்கும்.

## கவிதைப்பேழை - பாடறித்து ஒழுகுதல்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பசியால் வாடும் ............... உணவளித்தல் நமது கடமை.

அ) பிரிந்தவர்க்கு **ஆ) அலந்தவர்க்கு** இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

2. நம்மை .............ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**அ) இகழ்வாரை** ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

3. மறைபொருளைக் காத்தல் ................ எனப்படும்.

அ) சிறை ஆ) அறை இ) கறை **ஈ) நிறை**

4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து **இ) பாடு + அறிந்து** ஈ) பாட்டு + அறிந்து

5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) முறையப்படுவது **ஆ) முறையெனப்படுவது**

இ) முறை எனப்படுவது ஈ) முறைப்படுவது

### ஆ. குறுவினா

**1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?**

(i) பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.

(ii) அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.

**2. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?**

(i) நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.

(ii) பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல் ஆகும்.

### இ. சிறுவினா

**1. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.**

நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்கள்:

(i) இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல்.

(ii) பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்.

(iii) பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.

(iv) அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.

(v) அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

(vi) செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.

(vii) நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல்.

(viii) நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.

(ix) பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல். நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்புநலன்களைப் பின்பற்றி வாழவேண்டும்.

**ஈ. சிந்தனை வினா**

**1. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?**

வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புநலன்கள்:

(i) பிறரிடம் அன்பு காட்டுதல்.

(ii) இனிமையாகப் பழகுதல்.

(iii) மறந்தும் கூட பிறருக்குக் கேடு நினையாமை

(iv) பெற்றோரை மதித்தல், பேணுதல்.

(v) தெய்வத்தை வழிபடுதல்.

(vi) ஒழுக்கத்துடன் வாழ்தல்.

(vii) பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காமை.

## உரைநடை உலகம் - நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ....................

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் **இ) பனையோலைகள்** ஈ) மண்பாண்டங்கள்

2. பானை .................... ஒரு சிறந்த கலையாகும்.

அ) செய்தல் **ஆ) வனைதல்** இ) முடைதல் ஈ) சுடுதல்

3. 'மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) மட்டு+மல்ல ஆ) மட்டம்+அல்ல இ) மட்டு+அல்ல **ஈ) மட்டும் + அல்ல**

4. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............

அ) **கயிற்றுக்கட்டில்** ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

**ஆ. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக**

1. முழுவதும் - தொழிலாளி நாள் முழுவதும் உழைப்பார்.
2. மட்டுமல்லாமல் - புயல் காற்று வீசியதில் செடிகொடிகள் மட்டுமல்லாமல் மரங்களும் வீழ்ந்தன.
3. அழகுக்காக - முகத்தின் அழகுக்காக இயற்கைக் களிம்புகளை மட்டும் பயன்படுத்தலாம்.
4. முன்பெல்லாம் - மாணவர்களுக்கு முன்பெல்லாம் ஓடியாடி விளையாடுவ தற்கு நேரம் இருந்தது.

**இ. குறுவினா**

**1. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?**

**கைவினைக் கலைகள்:**

(i) மண்பாண்டங்கள் செய்தல்.
(ii) மூங்கில் கொண்டு பொருள்கள் செய்தல்.
(iii) பனையோலையில் பொருள்கள் செய்தல்.
(iv) பிரம்பினால் பொருள்கள் செய்தல்.
(v) மண் பொம்மைகள் செய்தல்.
(vi) மரபொம்மைகள் செய்தல்.
(vii) காகிதப் பொம்மைகள் செய்தல்.
(viii) தஞ்சாவூர்த்தட்டு செய்தல்.
(ix) சந்தன மாலையும், ஏலக்காய் மாலையும் செய்தல்.
(x) மாட்டுக்கொம்பு, சங்கு, கிளிஞ்சல் போன்றவற்றால் பொருள்களை உருவாக்குதல்

**2. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.**

| மண்பாண்டம் செய்தல் | சுடுமண் சிற்பம் செய்தல் |
|---|---|
| களிமண்ணுடன் மெல்லிய சணல், சாம்பல் ஆகியவற்றைக் கலந்து மண்பாண்டங்கள் செய்து சூளையில் சுட்ட பின் பயன்படுத்தப்படும். | களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படும். |

KNOWLEDGE IS POWER

**3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?**

பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள்:

(i) குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை

(ii) பொம்மைகள்

(iii) பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான்

(iv) பெரிய கூடை

(v) சுளகு

(vi) விசிறி

(vii) தொப்பி

(vii) ஓலைப்பாய்

## ஈ. சிறுவினா

**1. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.**

(i) முதலில் பிரம்பினை நெருப்பில் காட்டிச் சூடுபடுத்துவர்.

(ii) சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரண்டு கடப்பாரைகளுக்கு இடையே செலுத்தி - வளைப்பர்.

(iii) அது வேண்டிய வடிவத்தில் கம்பிபோல வளையும்.

(iv) பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்துவிட்டால் அப்படியே நிலைத்துவிடும்.

(v) பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாக மாற்றுவர்.

**2. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.**

(i) மூங்கிலைக் கொண்டு பலவகையான கைவினைப் பொருள்கள் செய்யப்படுகின்றன.

(ii) மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக் குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் எனப் பல பொருள்கள் மூங்கில் மூலம் உருவாகின்றன.

(iii) பிறந்த குழந்தைக்கு விளையாட்டுப் பொருள் முதல் இறந்தவரை எடுத்துச்செல்லும் பாடை வரை மூங்கிலால் செய்யப்படுகின்றன.

(iv) திருமணத்தின் போது துணிகள், பழங்கள், பலகாரங்களை வைத்துக் கொடுப்பதற்குச் சீர்க்கூடைகளாகப் பயன்படுகின்றது.

(v) கடவுள் வழிபாட்டின் போது வெற்றிலை, பாக்கு, பூ, பழம் போன்றவற்றை முறத்தில் வைத்துப் படைப்பர். அவையெல்லாம் இப்போது வழக்கொழிந்து விட்டன.

## உ. நெடுவினா

### 1. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**முன்னுரை:**

அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில் முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக்கலை எனலாம். மண்பாண்டம்

**செய்தல்:**

குளங்கள், ஆற்றங்கரை, வயல்வெளிகள் ஆகிய இடங்களில் கிடைக்கும் களிமண்ணைப் பயன்படுத்தி மண்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. இப்பாண்டங்கள் சமையல் செய்வதற்கும், தண்ணீர் வைப்பதற்கும் பயன்படுகின்றன

**சுடுமண் சிற்பங்கள்:**

மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும். இதில் விலங்குகள், பறவைகள், பொம்மைகள், அலங்கார வடிவங்கள் எனப் பலவகையான சிற்பங்கள் செய்யப்படுகின்றன.

**மூங்கில்கலை :**

மூங்கிலைக் கொண்டு மட்டக்கூட்டை, தட்டுக் கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத் தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் எனப் பல பொருள்கள் செய்யப்படுகின்றன.

**கோரைப்பாய்:**

கோரைப்புல்லைப் பயன்படுத்தி பந்திப்பாய், தடுக்குப்பாய், திண்ணைப்பாய், பட்டுப்பாய், தொழுகைப்பாய் எனப் பலவகையான பாய்கள் செய்யப்படுகின்றன. பாய்களில் மயில், பூக்கள், குத்துவிளக்கு, வழிபாட்டுச் சின்னங்கள் போன்றவையும் இடம் பெறுகின்றன.

**பனையோலை:**

பனையோலைகளைப் பயன்படுத்திக் கிலுகிலுப்பை, பொம்மைகள்,

பொருள்களை வைத்துக் கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் போன்றவை செய்யப்படுகின்றன. பனைமட்டை நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

**பிரம்புக்கலை:**

கட்டில், ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை, பழக்கூடை, இடியாப்பத்தட்டு, அருச்சனைத்தட்டு, வெற்றிலைப் பெட்டி எனப் பல பொருள்கள் பிரம்பினால் செய்யப்படுகின்றன.

**முடிவுரை:**

கைவினைக் கலை அழியாமல் இருக்க நாம் அப்பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை உருவாக்கும் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**ஊ. சிந்தனை வினா**

**1. கைவினைக் கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

(i) தமிழகக் கைவினைப் பொருட்கள் அனைத்தும் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்டவை.

(ii) பயன்பாட்டிற்குப் பின்னர் இவற்றை மண்ணில் போட்டாலும் நிலவளம் பாதிக்காது. ஏனெனில் இவை மட்கும் தன்மையுடையவை.

(iii) இப்பொருட்களை செய்வதற்கு எவ்வித இரசாயனப் பொருள்களையும் * பயன்படுத்துவில்லை. ஆகையால், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

## விரிவானம் - தமிழர் இசைக்கருவிகள்

**1. காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

இசைக்கு மயங்காதவர் எவருமில்லை . இதனை அனைவரும் அறிவர். அந்த இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக்கருவிகள். இவை தோல் கருவி, நரம்புக் கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும். இவற்றுள் காற்றுக்கருவியைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**குழல்:**

காடுகளில் வளரும் மூங்கில்களில் வண்டுகள் ஏற்படுத்திய துளைகள் வழியாக காற்று வீசும் போது. இனிய இசை எழும்பும். இதனால் மகிழ்ந்த நம் முன்னோர் வேய்ங்குழல், புல்லாங்குழல் போன்றவற்றை உருவாக்கினர். குழல்

ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையது. இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும்.

மூங்கில் மட்டுமன்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன. கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல் குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. குழல் இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர். (திருக்குறள்)

**கொம்பு:**

மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. இக்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தில் கொம்புகள் செய்யப்படுகின்றன. இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர்.

கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும் மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர். ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின் போது இசைக்கப்படுகின்றன.

**சங்கு:**

இஃது ஓர் இயற்கைக் கருவி.கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்க நாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். கோயில் திருவிழாக்களின் போதும் சமயச் சடங்குகளின் போதும் சங்கு முழங் கும் வழக்கம் உண்டு. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணா னைப் பாடேலோர் எம்பாவாய். - என்று திருப்பாவை கூறுகிறது.

**முடிவுரை:**

இவ்வாறு இசைக் கருவிகள் நம் வாழ்வோடு இணைந்துள்ளன என்பதை உணர்ந்து மகிழலாம்.

## கற்கண்டு - தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ....................

   அ) **வேற்றுமைத்தொகை** ஆ) உம்மைத்தொகை

   இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

2. 'செம்மரம்' என்னும் சொல் ............... த்தொகை.

அ) வினை **ஆ) பண்பு** இ) அன்மொழி ஈ) உம்மை

3. 'கண்ணா வா!' - என்பது ...................த் தொடர்.

அ) எழுவாய் **ஆ) விளி** இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

## ஆ. பொருத்துக

1. பெயரெச்சத் தொடர் - எழுதிய பாடல்.
2. வினையெச்சத் தொடர் - பாடி முடித்தான்.
3. வினைமுற்றுத் தொடர் - வென்றான் சோழன்.
4. எழுவாய்த் தொடர் - கார்குழலி படித்தாள்.
5. விளித் தொடர் - புலவரே வருக.

## இ. சிறுவினா

**1. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகைநிலைத் தொடர் ஆறுவகைப்படும். அவை

(i) வேற்றுமைத்தொகை
(ii) வினைத்தொகை
(iii) பண்புத்தொகை
(iv) உவமைத்தொகை .
(v) உம்மைத்தொகை
(vi) அன்மொழித்தொகை

**2. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.**

(i) இரவுபகல் - உம்மைத்தொகை
(ii) இத்தொடர் இரவும் பகலும் என விரிந்து பொருள் தருகின்றது.
(iii) இதில் சொற்களின் இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதால் உம்மைத்தொகை ஆயிற்று.

**3. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**அன்மொழித்தொகை :**

(i) வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள் அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை (அல் + மொழி + தொகை) எனப்படும்.

எ.கா. பொற்றொடி வந்தாள் பொற்றொடி - பொன்னாலான வளையல் என்பது பொருள்.

(ii) வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்கும் போது 'பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண்' என்னும் பொருளைத் தருகிறது.

(iii) இதில் ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் ஆகிய' என்னும் அதன் பயனும் மறைந்து வந்துள்ளது.

(iv) ஆதலால் இது மூன்றாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

## மொழியை ஆள்வோம்

### அ. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக

(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

1. இடி உடன் மழை வந்தது.
2. மலர்விழி தேர்வின் பொருட்டு ஆயத்தமானாள்.
3. அருவி மலையில் இருந்து வீழ்ந்தது.
4. தமிழைக் காட்டிலும் சுவையான மொழியுண்டோ!
5. யாழ், தமிழர் உடைய இசைக் கருவிகளுள் ஒன்று.

### ஆ. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை , பிடில், நாகசுரம், மகுடி.

**அகரவரிசை:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. உடுக்கை | 2. உறுமி | 3. கணப்பாறை | 4. தவண்டை | 5. தவில் |
| 6. நாகசுரம் . | 7. படகம் | 8. பிடில் | 9. பேரியாழ் | 10. மகுடி |

### இ. அறிந்து பயன்படுத்துவோம்

**இணைச்சொற்கள்**

தொடர்களில் சில சொற்கள் இணையாக இடம்பெற்று, பொருளுக்கு வலுவூட்டும். அவற்றை இணைச்சொற்கள் என்கிறோம். (எ.கா.) தாய் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள். இணைச் சொற்கள் மூன்று வகைப்படும். அவை,

1. நேரிணை, 2. எதிரிணை, 3. செறியிணை

அ) ஒரே பொருளைத் தரும் இணை நேரிணை எனப்படும்.
(எ.கா.) சீரும் சிறப்பும், பேரும் புகழும்.

ஆ) எதிரெதிர்ப் பொருளைத் தரும் இணை எதிரிணை எனப்படும்.
(எ.கா.) இரவுபகல், உயர்வுதாழ்வு

இ) பொருளின் செறிவைக் குறித்து வருவன செறியிணை எனப்படும்.
(எ.கா.) பச்சைப்பசேல், வெள்ளைவெளேர்.

**ஈ. பின்வரும் இணைச் சொற்களை வகைப்படுத்துக.**

| நேரிணை | எதிரியிணை | செறியிணை |
|---|---|---|
| உற்றார் உறவினர் | விருப்பு வெறுப்பு | கன்னங்கரேல் |
| ஆடல் பாடல் | காலை மாலை | வாடிவதங்கி |
| பட்டிதொட்டி | உள்ளும் புறமும் | நட்ட நடுவில் |
| | மேடு பள்ளம் | |

**உ. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக**

(மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட, வாழ்வுதாழ்வு, ஆடி அசைந்து)

1. சான்றோர் எனப்படுபவர் கல்விகேள்வி களில் சிறந்தவர் ஆவர்.
2. ஆற்று வெள்ளம் மேடுபள்ளம் பாராமல் ஓடியது.
3. இசைக்கலைஞர்கள் போற்றிப் புகழப்பட வேண்டியவர்கள்.
4. தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு வாழ்வு தாழ்வு இல்லை.
5. திருவிழாவில் ஆடி அசைந்து யானை வந்தது.

**ஊ. கடிதம் எழுதுக - இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

**விடுநர்:**

கவிதா ம.
எண். 15, முத்தம்மன் கோவில் தெரு,
சாய்நாதபுரம்,
வேலூர்.

**பெறுநர்:**

உயர்திரு வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வேலூர்.

**மதிப்பிற்குரிய ஐயா,**

பொருள் : இருப்பிடச் சான்று வேண்டி.

வணக்கம். நான் மேலே குறிப்பிட்ட முகவரியில் பத்து ஆண்டுகளாகக் குடும்பத்துடன் இருக்கிறேன். நான் படிக்கும் பள்ளியில் என் இருப்பிடம் பற்றிய விவரத்தைக் கேட்கின்றனர். ஆதலால் நான் இம்முகவரியில்தான் வசிக்கிறேன்

AKSHAYA ACADEMY MATRIC. HR. SEC. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

என்பதற்கான இருப்பிடச் சான்றிதழ் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இணைப்பு:

'குடும்ப அட்டை நகல்

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
கவிதா ம.

உறைமேல் முகவரி

அஞ்சல் தலை

பெறுநர்

உயர்திரு வட்டாட்சியர் அலுவலகம்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வேலூர்.

## மொழியோடு விளையாடு

### அ. குறுக்கெழுத்துப் புதிர்.

**இடமிருந்து வலம்**

1. முதற்கருவி எனப் பெயர் பெற்றது.
2. யாழிலிருந்து உருவான பிற்காலக் கருவி
7. இயற்கைக் கருவி
12. விலங்கின் உறுப்பைப் பெயராகக் கொண்ட

**வலமிருந்து இடம்**

4. வட்டமான மணி போன்ற கருவி
8. ஐந்து வாய்களைக் கொண்ட கருவி
9. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர்

**மேலிருந்து கீழ்**

1. 19 நரம்புகளைக் கொண்ட யாழ்
3. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை ...........க் கருவி
5. சிறியவகை உடுக்கை.
6. பறை ஒரு ............... கருவி

### கீழிருந்து மேல்

8. மூங்கிலால் செய்யப்படும் காற்றுக் கருவி
10. வீணையில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை.
11. திருமணத்தின் போது கொட்டும் முரசு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | த் | த | ள | ம் | | 2 வீ | ணை |
| க | | | டி | ண் | 3 க | 4 சே | 5 கு |
| ர | 6 தோ | | | | ஞ் | | டு |
| யா | ல் | சு | | ல் | 7 ச | ங் | கு |
| ழ் | | ர | | ழ | | | டு |
| | ழா | மு | ட | 8 கு | | | ப் |
| ழு | | ண | | ர் | ண | 9 பா | பை |
| 10 ஏ | | 11 ம | | 12 மு | ழ | வு | |

### ஆ. கலைச்சொல் அறிவோம்

1. கைவினைப் பொருள்கள் - Crafts
2. புல்லாங்குழல் - Flute
3. முரசு - Drum
4. கூடைமுடைதல் - Basketry
5. பின்னுதல் - Knitting
6. கொம்பு - Horn
7. கைவினைஞர் - Artisan
8. சடங்கு - Rite

## திருக்குறள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. அரசரை அவரது ...................... காப்பாற்றும்.

   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை

   **இ) குற்றமற்ற ஆட்சி** ஈ) படை வலிமை

2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ................. தகுதி அறிந்து பேச வேண்டும்.

   அ) சொல்லின் **ஆ) அவையின்** இ) பொருளின் ஈ) பாடலின்

3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

   **அ) கண்+ஓடாது** ஆ) கண்+ணோடாது இ) க+ஓடாது ஈ) கண்ணோ+ஆடாது

AKSHAYA Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற

5. என்ற + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................

அ) என்றாய்ந்து ஆ) என்று ஆய்ந்து இ) என்றய்ந்து ஈ) என் ஆய்ந்து

## ஆ. குறுவினா

**1. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?**

இச்செயலை இந்த வகையால் இவர் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**2. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?**

எதையும் நன்கு ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

**3. அரசன் தண்டிக்கும் முறை யாது?**

ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும். இதுவே அரசன் தண்டிக்கும் முறை ஆகும்.

**4. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?**

கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பாகும்.

## இ. பின்வரும் நிகழ்வுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பள்ளி ஆண்டுவிழா ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலைக்குழுத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று பேசப்பட்டது. ஆசிரியர்கள் பள்ளி மாணவர் தலைவன் செழியனை பரிந்துரைத்தனர். தலைமை ஆசிரியர் செழியன் மாணவர் தலைவனாக இருக்கிறான். ஆனால் இது கலைக்குழுவிற்கான தலைவர் பதவி. நடனம், இசை, நாடகம் என அனைத்துத் துறைகளிலும் ஆர்வமுள்ள ஒருவரே இதற்குத் தகுதியானவர். எனவே என்னுடைய தேர்வு கலையரசன்' என்று நன்கு ஆராய்ந்து கூறினார். ஆசிரியர்கள் அனைவரும் சிறந்த தேர்வு' என்று மகிழ்ந்தனர்.

1. அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர்.

2. இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

3. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

**தெரிந்து வினையாடல்**

1. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

**தெளிவுரை:** செயலாற்றும் திறன் உடையவரையும் செய்ய வேண்டிய செயலையும் செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து அச்செயலை நிறைவேற்ற வேண்டும்.

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

**தெளிவுரை:** இச்செயலை இந்த வகையால் இவர் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**செங்கோன்மை**

3. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

**தெளிவுரை:** எதையும் நன்கு ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

4. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

**தெளிவுரை:** உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பற்றும்.

**வெருவந்த செய்யாமை**

5. தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

**தெளிவுரை:** ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும்.

6. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

**தெளிவுரை:** நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்.

## சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவாதம் சொல்.

**தெளிவுரை:** கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொற்றலாற்றலின் இயல்பாகும்.

8. சொல்லுக சொல்லைப் பிறர்ஓர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து.

**தெளிவுரை:** நாம் சொல்லும் சொல்லை வேறு சொல்லால் வெல்ல இயலாதவாறு சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும்.

## அவையறிதல்

9. அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர்.

**தெளிவுரை:** சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் அவையின் தகுதி அறிந்து பேசுதல் வேண்டும்.

10. கற்று அறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

**தெளிவுரை:** சொற்களை ஆராயும் அறிஞர் நிறைந்த அவையில் பேசும்போதுதான் பல நூல்களைக் கற்றவரின் கல்வி பெருமையடையும்

## நூல் வெளி

பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTI KNOWLEDGE IS POWER